பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 13 | வெள்ளிக்கிழமை | 26.04.2024 | அதிர்வு 269

## சம்பந்தன் எம்.பிக்கு மூன்று மாத விடுமுறை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற

06

# மீண்டும் போராட்டம் ஏற்படாதவாறு பொருளாதாரத்தைக் கட்டமைப்போம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி



இலங்கையில் மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாத வகையில் பொருளாதாரத்தைக் கட்டமைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

சரிவடைந்த பொருளாதாரத்தை இரண்டு வருடங்களில் மீட்க முடிந்தது என்று தெரிவித்த ஜனாதிபதி, சரிவடையாத வகையில் வலுவான பொருளாதாரத்தை கட்டமைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகவும் உறுதியளித்தார்.

கொழும்பு ஐ.ரி.சி. ரத்னதீப அதி சொகுசு ஹோட்டல் கட்டடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

06

# இம்முறை தேர்தல் பரப்புரையாக மாறவுள்ள மே தினக் கூட்டங்கள்



மே தினக் கூட்டத்தையும், பேரணியையும் தமது அரசியல் பலத்தைப் வெளிப்படுத்துவதற்கான களமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

எதிர்வரும் செப்டெம்பர் இறுதியில் அல்லது ஒக்டோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால் இம்முறை மே தினக் கூட்டம் கூட, ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரம்பகட்ட பிரசாரக் கூட்டமாகவே அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அறகலயவால் ஜனாதிபதிப் பதவி, பிரதமர் பதவி என்பவற்றை இழந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன கட்சி, மக்கள் போராட்டத்துக்குப் பிறகு அடுத்த தேர்தலையே முதலாவது தேர்தலாக எதிர்கொள்கின்றது.

69 இலட்சமாக இருந்த மொட்டுக் கட்சியின் வாக்கு

07

## சு.கவின் பதில் பொதுச்செயலாளராக துமிந்த திஸாநாயக்க எம்.பி. நியமனம்




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, நிமல் சிறிபாலடி சில்வா தரப்பால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் அரசியல் சபைக் கூட்டம், பதில் தலைவர் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தலைமையில்

06




வழமை போல நேற்றுக் காலையும் பணி முடித்து விடியும் வேளைதான் நித்திரைக்குச் சென்றிருந்தேன். தலைமாட்டில் கைத்தொலைபேசி முணுமுணுத்தது. எரிச்சலாக இருந்தது. பார்த்தேன். 'வாட்ஸ் அப்' அழைப்பு. புதிய இலக்கம்.

"ஹலோ!" என்று அனுங்கினேன். பழைய நண்பர்தான். புதிய இலக்கத்தில் வந்திருந்தார்.

"சாத்திரியருடன் பேசலாமோ?" – என்றார். நானோ தூக்கக் கலக்கத்தில். அவரது நையாண்டி எனக்கு முதலில் புரியவில்லை.

"இல்லை, நீ கூறும் ஆருடங்கள் பல சமயங்களில் சித்திப்பதால் அப்படி அழைத்தேன்" – என்றார் அவர். அவரின் நக்கல் எனக்குப் புரிந்தது.

06



# தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்

## நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் தொடர்பில் தாம் முன்வைத்த கோரிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை மே தினத்துக்குள் அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், நாடாளுமன்றில் நேற்று கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், தமது கோரிக்கைகளை ஜனாதிபதியும் தொழில் அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு விடயத்தில் பெருந்தோட்ட நிறுவனங்கள், மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த்குமார் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

முதலாளிமார் சம்மேளனத்தினால் வழங்கப்படும் பணத்தை பெற்றுக் கொண்டு பெருந்தோட்ட தொழிலாளர்களை காட்டிக் கொடுக்கும் செயற்பாடுகளில் தொழிற்சங்கங்கள் ஈடுபடுகின்றன என தோட்டத் தொழிலாளர் மத்திய நிலையத்தின் இணை அமைப்பாளர் மாக்ஸ் பிரபாகர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பண்டாரவளையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அத்துடன், தேர்தலை இலக்காகக் கொண்டே தொழிற்சங்கங்கள் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பளம் குறித்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கின்றன எனத் தோட்டத் தொழிலாளர் மத்திய நிலையத்தின் இணை அமைப்பாளர் மாக்ஸ் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

# சாதாரண தர மேலதிக வகுப்புகளுக்கு 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை!




கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் எதிர்வரும் 30 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவு செய்யப்பட வேண்டும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விதிகளை மீறி செயற்படும் நபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களத்தின் பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் லசிக சமரகோன் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மே 6ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, அண்மையில் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் மே மாதம் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.







# ஐ.ரி.சி. ரத்னதீப அதி சொகுசு ஹோட்டல் கட்டடம் திறப்பு

கொழும்பு ஐ.ரி.சி. ரத்னதீப அதி சொகுசு ஹோட்டல் கட்டடத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திறந்து வைத்தார். காலிமுகத்திடலுக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஐ.ரி.சி. ரத்னதீப ஹோட்டல் இந்திய ஐ.ரி.சி. ஹோட்டல் குழுமத்தால் இந்தியாவுக்கு வெளியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் முதலாவது கட்டடமாகும். இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்களான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, பிரசன்ன ரணதுங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்துஷ் ஜா, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி சவேந்திர சில்வா, ஐ.ரி.சி. ஹோட்டல் குழுமத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளர் சஞ்ஜீவ் ஜுரி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

























# வாகரையில் இல்மனைற் அகழ்வுக்கு ஆதரவு தெரிவித்தோர் விரட்டியடிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரையில் இறால்பண்ணை மற்றும் இல்மனைற் அகழ்வுக்கி ஆதரவு தெரிவித்து அராசாங்க அதிபருக்கு மகஜர் கையளிக்க வந்த குழுவினரை அதற்கு எதிரான பொதுமக்கள் கச்சேரியில் வைத்து எதிர்ப்பு தெரிவித்து அவர்களை அங்கிருந்து விரட்டியடித்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது

இதுபற்றித் தெரியவருவதாவது:-

வாகரை பிரதேசத்தில் இறால் பண்ணை அமைப்பதற்கும் மற்றும் இல்மனைற் அகழ்வதற்கும் எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் தொடர்ச்சியாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த நிலையில் இறால்பண்னை அமைப்பதற்கும் மற்றும் இல்மனைற் அகழ்வதற்கும் ஆதரவு தெரிவித்து அந்தத் திட்டங்களை முன்னெடுத்துவரும் தனியர் கம்பனிகளுடைய ஆதரவுடன் அந்தப் பகுதியை சேர்ந்த 50 பேர் கொண்ட குழுவினர் பஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, நேற்றுக் காலை மட்டு நகரிலுள்ள அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு செல்வதற்காக பஸ்ஸில் ஏறிய நிலையில், அதனை அறிந்த பிரதேசப் பொதுமக்கள் ஒன்று திரண்டு, அந்த் பஸ்ஸை நிறுத்தி, அவர்களைக் கச்சேரிக்குச் செல்லவிடாது தடுத்து நிறுத்தி, அவர்களை பஸ்ஸில் இருந்து வெளியே இறக்கினர்.

இதனைத் தொடர்ந்து பஸ்ஸிலிருந்து இறங்கிய குழுவினர், பிரிந்து தனித்தனியக வேறு பஸ்களில் ஏறி கச்சேரியை வந்தடைந்தனர்.

இந்த நிலையில் இல்மனைற் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரதேச பொதுமக்களும் மட்டு நகரை வந்தடைந்து, காந்தி பூங்காவிற்கு முன்னால் கவனவீர்ப்பு ஆர்பாட்டத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் ஈடுபட்டனர்.

இதன் போது இல்மனைற் அகழ்வுக்கு ஆதரவு தெரிவித்த குழுவினர் கச்சேரிக்கு வந்தடைந்துள்ளனர் என்ற தகவல் கிடைத்ததையடுத்து, ஆர்பாட்டகாரார்கள் ஆர்பாட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, அங்கிருந்து கச்சேரியைச் சென்றடைந்தனர்.

இதன் போது அங்கு இல்மனைற் அகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து அரசாங்க அதிபருக்கு மகஜர் கையளிக்க வந்திருந்த குழுவினருக்கும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களுக்கும் இடையே பெரும் வாக்குவாம் இடம்பெற்ற நிலையில், மகஜர் கையளிக்க வந்த குழுவினரை மகஜர் கையளிக்க விடாது அங்கிருந்து அவர்கள் விரட்டியடித்தனர்.











# கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் அமைந்துள்ள ஜப்பானிய உணவகத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்

கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் நிறுவப்பட்ட 'நிஹொன்பஷி' ஜப்பானிய உணவகத்தை நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்துவைத்தார்.

1995 ஆம் ஆண்டு காலி முகத்திடல் டெரஸில் நிறுவப்பட்ட முதலாவது நிஹொன்பஷி ஜப்பானிய உணவகம், பிரபல சமையல் கலைஞரான தர்ஷன முனிதாஸவினால் நாட்டிற்கு அளிக்கப்பட்ட முன்னணி உணவகமாகும். கடந்த 29 ஆண்டுகளாக, இந்த உணவகம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சுவையான ஜப்பானிய உணவை ருசிக்கும் வாய்ப்பை வழங்கியது.

தற்போது இந்த உணவகம் காலி முகத் திடல் நகர வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. உணவகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்த ஜனாதிபதி, மேற்பார்வை சுற்றுப் பயணத்தை மேற்கொண்டமையுடன், அங்கிருந்த பொதுமக்களுடன் சிநேக பூர்வமாக உரையாடினார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# பால் தேநீரை 80 ரூபாவிற்கு வழங்குமாறு வேண்டுகோள்

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு கோப்பை பால் தேநீரை 80 ரூபாவிற்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத், சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் காரணமாக நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பால்மா இறக்குமதியாளர்கள், பால்மாவின் சில்லறை விலையை குறைக்கத் தீர்மானித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக பால்மாவின் விலை அதிகரித்தமையினால், பால் தேநீருக்கான கேள்வி குறைவாகக் காணப்பட்டது.

தற்போது அந்த நிலை மாறியுள்ளதுடன், மீண்டும் 80 ரூபாவிற்கு ஒரு கோப்பை பால் தேநீரை வழங்குமாறு அசேல சம்பத் கோரிக்கை விடுத்துள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"காலையில் ஒரு செய்தி பார்த்தேன். அதை பார்த்ததும் நடிகர் வடிவேலு ஜோக் நினைவுக்கு வந்தது. அதை உன்னுடன் தான் பகிரலாம் என்று தோன்றியது. அதுதான் அழைத்தேன்." – என்றார்.

எனது அருமையான விடிகாலை நித்திரை மூன்று மணித்தியாலங்களுடன் குழம்புகிறது என்ற விசனத்தில் இருந்த எனக்கு ஜோக்கை செவிமடுக்கும் 'மூட்' இருக்கவில்லை.

"பில்டிங் ஸ்ட்ரோங், பேஸ்மெண்ட் வீக் என்ற வடிவேலு ஜோக் நினைவில்இருக்கின்றதா?" – என்று கேட்டார் நண்பர்.

அந்தக் கேள்வியுடன் என் நித்திரை அவுட்! நான் எழுந்து உட்கார்ந்தேன். ஜோக் சுவாரசியத்துக்குள் புகுந்து கொண்டேன்.

"ஆமாம் படம் பெயர் மறந்து விட்டது. அந்தப் படத்தில் வடிவேலு கரெக்டருக்கு பெயர் 'நாய் சேகர்' சரிதானே?" – என்று கேட்டேன்.

"வடிவேல் காமெடியில் இவ்வளவு சாதனை அறிவு படைத்த உனக்கு அதற்காக 'கலாநிதி' பட்டம் தரலாம்" என்றார் என் நண்பர்.

நான் திருத்தினேன்.

"நாங்கள் படிக்காதவர்கள். அதனால் 'கல்லாநிதி' என்று பட்டம் தரலாமே!" – என்று எனக்கு நானே பரிந்துரைத்தேன்.

"சரியாக – நேரடியாக – ஸ்பொட்டாக – விடயத்துக்கு வந்து விட்டாய். உண்மையில் நீ சாத்திரிதான்!" – என்றார் என் நண்பர்.

எனக்கு விளங்கவில்லை. என்ன என்று கேட்டேன்.

"இதுவும் ஒரு 'கல்லாநிதி' பற்றியது தான். கற்காமலேயே நிதி திரட்டும் தந்திரம் தெரிந்தமையால் 'கல்லாநிதி' என்று அழைக்கின்றனர் போலும்" – என விளக்கம் சொன்னார் அவர்.

அப்போதும் எனக்கு விளங்கவில்லை. என்ன என்று திரும்பவும் கேட்டேன்.

"நீ சொன்ன வடிவேலுவின் நாய்சேகர் ஜோக்கில் 'பில்டிங் ஸ்ட்ரோங், பேஸ்மெண்ட் வீக்' பகுதிக்குச் சற்று முன்னர் நடந்த விடயங்களைச் சொல்லு பார்க்கலாம்" என்றார் அவர்.

வடிவேல் ஜோக் விடயத்தில் 'மாஸ்டர்' பட்டம் பெறும் தகுதி படைத்த அதிவித்தகன் நான் என்ற எண்ணம் எனக்கு உண்டு. ஒப்புவிக்க தொடங்கினேன். (பாடசாலைக் காலத்தில் வகுப்புப் பாடத்தில் இந்த மனப்பாடத்தை பண்ணி இருந்தேன் என்றால் சில சமயம் ஒரிஜினல் 'கலாநிதி'யாக வந்திருக்கலாமோ என்னவோ.....!)

"ரௌடிக் கும்பலுக்கு முன்னால் வெறும் வாய்ச்சவடால் சண்டித்தனம் பண்ணிக் கொண்டிருப்பார் நாய் சேகரான வடிவேலு. அப்போது பொலிஸார் ஜீப்பில் வந்திறங்கி, ரௌடிக் கும்பலை ஜீப்பில் அள்ளிச் செல்வார்கள். பொலிஸார் மறிக்க – ஏற்ற மறுக்க – அவர்களுடன் தர்க்கம் பண்ணி, தானும் இடித்துப் பிடித்து ஜீப்பில் ஏறும் நாய் சேகர் ஜீப்பில் தொங்கிக்கொண்டு வீதியில் போவோர் வருபவர்களிடம் எல்லாம் சத்தமிட்டு கூவி, தன்னை அடையாளம் காட்டி, 'எல்லோரும் பாருங்கள், நானும் ரௌடிதான், நானும் ரௌடிதான். என்னையும் அரெஸ்ட் பண்ணிக் கொண்டு போறாங்கள், பாருங்கள்!' – என்ற சாரப்பட கத்திக் கூச்சலிட்டுத் தனக்கு ரௌடி பப்ளிசிட்டி தேடிகொள்ளுவார்...!" – என்றேன் நான்.

என் நண்பர் என்னை வழி மறித்தார்.

"இன்று (நேற்று) காலையில் ஒரு பத்திரிகை வட்ஸ் அப்பில் பார்த்தேன். அதன் வெளியீட்டாளருக்கு நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்திருந்தது. அதை முன் பக்கத்தில் லீட் செய்தி போடும் இடத்தில் தனது படத்துடன் வெளியிட்டிருந்தார் அதன் வெளியீட்டாளர். அதைப் பார்த்ததும் பொலிஸ் ஜீப்பில் ஏறித் தொங்கிக் கொண்டு 'எல்லோரும் பாருங்கள், நானும் ரௌடிதான், நானும் ரௌடிதான்' என்று நாய் சேகர் கத்திக் கொண்டு போன கொமெடிதான் நினைவுக்கு வந்தது. அதுதான் காலை விடியும் நேரம் உனக்கு அழைப்பு எடுத்தேன்." – என்றார் என் நண்பர்.

எனக்கு சப் என்று இருந்தது. எனது அசதியான காலை நித்திரைத் தூக்கத்தை நேரத்துடனேயே குழப்பிய நண்பனை "மூதேவி! உனக்குத்தான் 'கல்லாநிதி' பட்டம் கொடுக்க வேண்டும். அதை நீயாகவே உனக்குப் போட்டுக் கொள்ள வேண்டியதுதானே – இன்னொரு நாய்சேகர் போன்று...!"– என்று பொருமியபடியே தொலைபேசி அழைப்பைத் துண்டித்தேன்.

எங்களின் அந்த உரையாடல் இன்று வாசகர்களுக்குச் சமர்ப்பணம்.

## மீண்டும் போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொழும்பு – காலிமுகத்திடலுக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஐ.ரி.சி. ரத்னதீப ஹோட்டல் இந்திய ஐ.ரி.சி. ஹோட்டல் குழுமத்தால் இந்தியாவுக்கு வெளியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் முதலாவது கட்டடமாகும்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"ஐ.ரி.சி. நிறுவனத்தை இலங்கைக்கு வரவேற்கின்றேன். இது ஆசியாவின் முதலாவது ஐந்து நட்சத்திர ஹோட்டலான காலிமுகத்திடல் ஹோட்டலுக்கு முன்பாக அமைந்துள்ளது. அதற்கு அருகில் இந்திய தாஜ் ஹோட்டலும் உள்ளது. சிங்கப்பூர் ஹோட்டலான சங்ரீலாவும் அருகில் அமைந்துள்ளது. அதற்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள ஐ.ரி.சி. ஹோட்டலின் பின்புறத்தில் சினமன் கிரேண்ட் ஹோட்டலும் அமைந்திருக்கின்றது.

இவை அனைத்தும் இலங்கையின் ஹோட்டல் தொழில்துறைக்குள் உள்ளடங்கும். ஒபரோய் ஹோட்டல் இலங்கையில் அமைக்கப்பட்டு முதலாவது நகர ஹோட்டலாக மேம்படுத்தப்பட்டிருந்த நிலையில், நீண்ட காலத்துக்குப் பின்னர் இந்தியாவே இங்கு சுற்றுலா ஹோட்டல் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது. அதனால் இந்தியா, சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட ஹோட்டல்களும் இங்கு அமைந்துள்ளன. ஆசியாவில் எங்கும் இவ்வாறானதொரு இடத்தை நீங்கள் காண முடியாது.

இதனால் கொழும்பு நகரம் சுற்றுலா கேந்திரமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவுக்குள் நிர்மாணிக்கப்பட்ட 10 ஆயிரம் அறைகளைக் கொண்ட ஹோட்டல் கட்டடத்துக்குப் பின்னர் அடுத்தபடியாக அவர்கள் செல்லக்கூடிய சிறந்த இடமாக ஐ.ரி.சி. நிறுவனம் இலங்கையைத் தெரிவு செய்துள்ளமை சிறப்பம்சமாகும்.

அவர்களால் மேம்படுத்தக்கூடிய பல இடங்கள் இலங்கையில் அமைந்துள்ளன. அடுத்த தசாப்தத்தில் இலங்கை ஜனாதிபதி மாளிகை மாதிவெலவுக்குக் கொண்டு செல்லப்படும். அத்தோடு கொழும்பு குடியரசு சதுக்கம், கடற்படைத் தலைமையகம், பழைய இறங்குதுறை, சுங்கத் தலைமையகம், தபால் நிலையம் என அனைத்தையும் கொழும்பு சுற்றுலா நகரத்தின் அங்கமாக மேம்படுத்த முடியும்.

இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையை நீங்கள் மறந்திருக்கப்போவதில்லை. ஜனாதிபதியின் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே மக்கள் அதில் பங்கெடுத்தனர். இருப்பினும் அந்தப் பொருளாதார சரிவிலிருந்து இரண்டு வருடங்களில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

தற்போதும் கொழும்பு சுற்றுலா நகரமாக மாறியுள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள் பல காணப்படுவதால் சுற்றுலா வியாபாரத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியும். சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்பதற்கான அஸ்திரமாகவும் அது அமைந்திருக்கும். சுற்றுலா வியாபாரத்தினால் இலங்கையை துரிதமாக மீட்கலாம். அதற்கான வசதிகளை வழங்க நாம் தயார்.

அவ்வாறானதொரு மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாதவாறான பொருளாதாரத்தை கட்டமைக்க வேண்டும். அதற்கு தேவையான திட்டங்களை நாம் செயற்படுத்துவோம். இந்தத் திட்டங்களால் பொருளாதாரத்தையும் நிலைப்படுத்த முடியும். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும்." – என்றார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்களான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, பிரசன்ன ரணதுங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்துஷ் ஜா, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி சவேந்திர சில்வா, ஐ.ரி.சி. ஹோட்டல் குழுமத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளர் சஞ்ஜீவ் ஜுரி உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## சம்பந்தன் எம்.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் இரா. சம்பந்தனுக்கு மூன்று மாத விடுமுறை வழங்குமாறு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் பிரேரணையை உறுதிப்படுத்தினார்.

91 வயதுடைய சம்பந்தன் எம்.பி. தற்போது நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சு.கவின் பதில் பொதுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுக் கூடியது.

இதன்போதே மேற்படி பதவிக்கு துமிந்த திஸாநாயக்க ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபாலவுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ள நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# முதலாவது காலாண்டில் அரச வருமான இலக்குக்கு அப்பால் சென்று 6 வீத வளர்ச்சியை எட்டியுள்ளது!

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தகவல்



"இந்த வருடத்தின் முதல் காலாண்டில், அரச வருமானம் 834 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானத்திற்கு மேலதிகமான 6 வீத வளர்ச்சியாகும்."

– இவ்வாறு அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரும் நிதி இராஜாங்க அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இந்த ஆண்டு பணப்புழக்கத்தை முகாமைத்துவம் செய்வதில் திறைசேரி கடும் சவாலை எதிர்கொள்கிறது. தற்போதைய சட்டத்தின்படி கடன் பெறவும், பணத்தை அச்சிடவும் முடியாமலிருப்பதே அதற்குக் காரணமாகும். நலன்புரி மற்றும் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் அதிகமாக காணப்பட்டாலும், நாட்டில் சரியான முறையில் நிதி நிர்வாகம் செய்யப்படுகிறது.

மீள்கட்டமைப்புச் செலவுகள் குறித்து கவனம் செலுத்தி 2024 முதல் காலாண்டை 2020 முதல் காலாண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, 2024 முதல் காலாண்டில் மீள் கட்டமைப்புச் செலவுகள் 35 வீதம் அதிகரித்துள்ளன. கடன் வட்டியை திருப்பிச் செலுத்துவதிலும் 114 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மூலதனச் செலவுகளும் 60 வீதமாக அதிகரித்துள்ளன. பொதுக் கடனின் மூலதனத்தை திருப்பிச் செலுத்துவதிலும் 177 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 93,670 மில்லியன் ரூபா சமுர்த்திக் கொடுப்பனவுக்காக செலவிடப்பட்டுள்ளது. ஆனால் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 117,107 மில்லியன் ரூபா நலன்புரி உதவிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது. இது 2020 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் 25 வீத வளர்ச்சியைக் காண்பிக்கிறது.

மேலும், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் அரச வருமானம் 6 வீதம் வளர்ச்சியை எட்டியுள்ளது. இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 787 பில்லியன் ரூபா அரச வருமானமாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நாம் 834 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளோம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 430 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. இலங்கை சுங்கம் 354 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. மதுவரி திணைக்களம் 51 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்நிலை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட நாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகும். நாட்டில் சரியான நிதி முகாமைத்துவம் காணப்படுவதையும் உறுதிசெய்ய முடிந்துள்ளது.

மேலும் இவ்வாறான வருமான முறையைக் கருத்தில் கொண்டால் 2024ஆம் ஆண்டு வருமான இலக்குகளை எட்டக்கூடிய ஆண்டாக அமையும் என நம்பலாம்.

அத்தோடு, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் படி, பெப்ரவரி மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 5.1 வீதமாக காணப்பட்டது. இது மார்ச் மாதத்தில் 2.5 வீதமாக குன்றியது. அதேபோல் பெப்ரவரியில் 5.1 வீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 0.7 வீதமாக கணிசமானக் குறைவைக் காட்டுகிறது.

இந்த அனைத்து தரவுகளும் நாட்டின் பொருளாதார நிலைமை சுமூகமான தன்மையை அடைந்துள்ளதை உறுத்திப்படுத்துகின்றன." – என்றார்.

# சர்வதேச சக்திகளின் பொறிக்குள் சிக்கித் தவிக்கும் சுதந்திரக் கட்சி!

## தயாசிறி எம்.பி. கவலை



சர்வதேச சக்திகளின் பொறிக்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது சிக்கியுள்ளது என்று அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

"விஜயதாஸ ராஜபக்ஷவும் அமைச்சர், நிமல் சிறிபால டி சில்வாவும் அமைச்சர். கட்சி என்ற ரீதியில் எடுத்துக் கொண்டால் நிமல் சிறிபால டி சில்வாவே சிரேஷ்ட உறுப்பினர். எனவே, விஜயதாஸவை இணைப்பதற்கும், நிமல் தரப்பை மைத்திரி எதிர்ப்பதற்கும் உள்ள காரணம் புரியவில்லை."

– என்றும் தயாசிறி எம்.பி. குறிப்பிட்டார்.

அதேவேளை, "மைத்திரிபால தற்போது நன்றாகவே இறுகியுள்ளார். எனவே, நாட்டில் இருந்து தப்பிச் செல்லக்கூடும், வெளிநாடொன்றில் அரசியல் தஞ்சம் கோர முயற்சிக்கக்கூடும். எனவே, பாதுகாப்புக் கவசமொன்றை ஏற்படுத்திக் கொள்ளவே விஜயதாஸ தரப்பை மைத்திரிபால அணுகியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?" – என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,

"எனக்கு அது பற்றி சொல்ல முடியாது. பல பிரச்சினைகள் இருக்கும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான தீர்வைத் தேடக்கூடும். சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினையில் பூகோள அரசியலும் உள்ளது." – என்று தயாசிறி எம்.பி. பதிலளித்தார்.

## இம்முறை தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வங்கி சடுதியாக குறைவடைந்துள்ளது எனவும், அக்கட்சியால் ஆட்சிப்பீடமேற முடியாது எனவும் பரவலாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தமக்கு மக்கள் பலம் உள்ளது என்பதைக் காண்பிக்கும் வகையில் மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு மொட்டுக் கட்சி வியூகம் வகுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலைக் குறிவைத்தே மே தினக் கூட்டத்தை நடத்துகின்றது. ஐக்கய தேசியக் கட்சி தலைமையில் அமையவுள்ள கூட்டணிக்கான சமிக்ஞையும் இதன்போது வெளிப்படுத்தப்படவுள்ளது.

எதிரணி உறுப்பினர்கள் சிலர் ஐ.தே.க. மே தினக் கூட்டத்தில் மேடையேறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பனவும் தமக்கான மக்கள் ஆதரவு அலை அமோகமாக உள்ளது என்பதை வெளிப்படுத்தும் வகையில் மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தவுள்ளன.

இதர சிறு கட்சிகளும் தேர்தலை மையப்படுத்தியதாகவே மே தினக் கூட்டம், பேரணிகளை நடத்தவுள்ளன.

அதேபோல சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களாலும் மே தினக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முட்டாள் அரசின் மூடத்தனம்

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடிய இலங்கை இராணுவத்தின் உறுப்பினர்கள் தற்போது உக்ரைன் மற்றும் ரஷ்யாவிற்குச் சென்று அந்த இரு நாடுகளுக்காக எதிரும் புதிருமாக நின்று போரிட்டு வருகின்றனர்.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது பெரும் விசனத்தோடு கூறியிருக்கின்றார் தயாசிறி ஜயசேகர.

இலங்கை இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் முகாம் உதவியாளர்களாக அழைத்து செல்லப்பட்டு ரஷ்ய - உக்ரேனிய போரில் தள்ளப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"நமது இராணுவத்தில் இருந்தவர்கள் ரஷ்யா, உக்ரைன் என இரு தரப்பிலும் இணைந்துள்ளனர். இந்நிலையில், இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஓய்வு பெற்ற நமது இராணுவ வீரர்களுக்கு சரியான வருமானம் இல்லாமையால்தான் இவ்வாறு நடக்கிறது. இதற்கு இலங்கை அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? புலிகளுக்கு எதிராக நாங்கள் ஒன்றாகப் போராடினோம். ஆனால் இன்று இலங்கை இராணுவம் இரு நாடுகளுக்கிடையில் காணப்படுகிறது." என அவர் தெரிவித்துள்ளார்.

தயாசிறி ஜயசேகர சொல்வது உண்மை. பல சிங்கள அரசியல்வாதிகள் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் இயலாமல், வெளியே சொல்லவும் வக்கற்றிருந்த ஒரு விடயத்தை அவர் வெளிப்படையாக பேசியிருக்கிறார்.

ஓய்வு பெற்ற இலங்கை இராணுவ வீரர்களுக்கு சரியான வருமானமின்மையால்தான் அவர்கள் இவ்வாறு வெளிநாட்டுப் படைகளில் கூலிப் பட்டாளங்களாக இணைகின்றார்கள் என்று தயாசிறி ஜயசேகர கூறுவதும் சரியானதுதான்.

தமிழர்களுடைய உரிமைக்கான போராட்டத்தை பேரினவாத வெறிச் சிந்தனையுடன் அணுகிய தென்னிலங்கை ஆட்சிப் பீடம் அந்தப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்தது. அதை அழிப்பதற்காகப் பெரும் கொடூரங்களைப் புரிந்தது. அந்த கொடூரங்களை - அழிவு நாச வேலைகளை - முன்னெடுப்பதற்காகத் தனது படைத்துறைக்கு கொட்டிச் செலவழித்தது. உலகெங்கும் கையேந்தி, தண்டி, கடன் வாங்கி, நாட்டையும் வீட்டையும் அழித்தது.

ஒருவாறு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தனது இராட்சத வெறிப்போக்கு அணுகுமுறை மூலம் கொழும்பு அழித்தது என்றாலும், கடைசியில், யுத்தத்தில் தமிழர் தேசம் மீது போர்க் குற்றங்களைப் புரிந்தது, இனவழிப்பைச் செய்தது, இனப்படுகொலையை மேற்கொண்டது, மனித குலத்துக்கு ஒவ்வாத கொடூரங்களை முன்னெடுத்தது, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது என்றெல்லாம் அவப்பெயரை சர்வதேச மட்டத்திலும், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் சுவீகரித்துக் கொண்டது இந்தச் சிங்கள பேரினவாத நாடு.

இந்தக் கொடூரங்களுக்கான பொறுப்பு கூறலும், சர்வதேச விசாரணைகளும் இலங்கை தேசத்தின் தலை மீது கத்தியாகத் தொங்கிக்கொண்டு கிடக்கின்றது.

இந்தக் கொடூரங்களைப் புரிந்த குற்றங்களுக்காக மேற்கு நாடுகளுக்குச் செல்ல அஞ்சி நாட்டுக்குள் முடங்கி, குறுகிக் கிடந்த இராணுவத்தினரும், இராணுவ அதிகாரிகளும் தமது அனுபவத்துடன் வெளிநாட்டில் நிதி உழைப்பதற்கு அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும், பிரிட்டனுக்கும், ஜேர்மன், பிரான்ஸ் போன்ற மேற்கு நாடுகளுக்குமா போக முடியும்? அதனால் இன்று கூலிப் பட்டாளங்களாக - தமது முன்னைய மனித உரிமை மீறல் கொடூரங்களை கணக்கில் எடுக்காமல் (சில சமயங்களில் அந்த கொடூர சாதனைகளையே அவர்களின் மேலதிக தகுதியாகக் கருதி) யுத்தம் முனைக்கு வெற்றிலை வைத்து அழைத்து, கூலி வழங்கும் உறுதியைத் தருகின்ற உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் தான் அவர்கள் போக முடியும். இதுதான் கள யதார்த்தம்.

யுத்தம் முடிந்த பின்னராவது பௌத்த - சிங்களப் பேரினவாத அரசு தன்னைத் திருத்தி நேசீர் படுத்தியிருக்கலாம். தனது பேரினவாத மேலாண்மை ஆக்கிரமிப்புத் திமிரை கொஞ்சம் ஒதுக்கித் தள்ளி வைத்து விட்டு, சமரசப் போக்குடனும், தாராள மனதுடனும் நடந்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை.

தமிழர் தேசத்தை முழுமையாக ஆக்கிரமித்து, சிங்கள மயப்படுத்துவதற்காக, யுத்தம் முடிந்த பின்னரும் படைகளுக்கு சிங்களவர்களை எண்ணுக்கணக்கின்றி சேர்த்துத் தள்ளியது. சிங்கள இராணுவத்தை ஊதிப் பெருப்பித்து, தமிழர் தேசமெங்கும் இராணுவத்தை அடர்த்தியாக விதைத்தது. யுத்தம் முடிந்த பின்னரும் படையினர் எண்ணிக்கையை கணக்கு வழக்கின்றிக் கூட்டிய முட்டாள் ஆட்சிப்பீடம் இலங்கையினுடையது.

அதனால்தான் நாடு இன்று இந்தக் கதியில் என்பது துலாம்பரமானது.

யுத்தம் முடிந்த பின்னராவது தனது ஆக்கிரமிப்பு அகோரத்தை குறைத்து, படையைச் சுருக்கி, அந்த நிதியை இருந்த படையினருக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் நல்லிணக்கத்துக்கும் ஆக்கபூர்வமாக செலவிட்டிருந்தால் நாடு இந்த மோசநிலையை இவ்வளவு விரைவாக எட்டியிருக்காது. இராணுவத்தினரும் இப்படி வெளிநாட்டுக் கூலிப்படைகளாக ஓட வேண்டிய நிலைமையும் வந்திராது.

# தமிழகத்தை அச்சுறுத்தும் வெப்ப அலை; தயார் நிலையில் 2,000 சிகிச்சை மையங்கள்

## முதல்வர் ஸ்டாலின் தகவல்



"தமிழகத்திலுள்ள 2000 இற்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், நலவாழ்வு மையங்கள், சமூகநல மையங்கள், மகப்பேறு மருத்துவமனைகள், தொற்று நோய் மருத்துவமனைகள் ஆகியவை வெப்பம் தொடர்பான நோய்கள் குறித்து சிகிச்சை வழங்குவதற்கு ஏதுவாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன."

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"வெப்ப நிலை அதிகரிக்கும், வெப்ப அலை வீசும், என்பது போன்ற செய்திகள் தினந்தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இதனை உணர்த்தும் வகையில் கோடை வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அடுத்த 5 நாட்களுக்கு வடதமிழகத்தின் உள் மாவட்டங்களில் அதிக வெப்பமும் வெப்ப அலையும் ஏற்படக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இத்தகைய சூழலில் பொது மக்கள் கவனத்துடனும் மிகுந்த எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக கோடை காலம் என்பது வெப்பம் அதிகம் உள்ள மாதங்களாக இருந்தாலும், நாளுக்கு நாள் வெப்ப அளவு அதிகமாகி வருகிறது. இதில் இருந்து மக்களை பாது காக்க வேண்டியது அரசின் கடமை ஆகும். அதனால்தான், தலைமைச் செயலகத்தில் அரசுத் துறை அதிகாரிகளுடன் இது தொடர்பாக விரிவான ஆலோசனை நடத்தினேன். இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், மருத்துவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் ஆலோசனையை அரசு அதிகாரிகள் கேட்டுத் தெரிந்து கொண்டதன் அடிப்படையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த அறிக்கையை வெளியிடுவது மிக மிக அவசியமானதாகக் கருதுகிறேன்.

வெப்பநிலை அதிகமாகும் காலங்களில் குழந்தைகள், பாடசாலை மாணவ, மாணவிகள், வயதானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், உடல்நலக் குறைபாடுகள் உடையவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படலாம். இவர்களை மிகக் கவனமாக பாதுக்காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.கோடை வெயிலினால் அதிக வியர்வை வெளியேறும்போது, உடலில் உப்புச்சத்து மற்றும் நீர்ச்சத்து பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் அதிக தாகம், தலைவலி, உடல் சோர்வு, தலைசுற்றல், தசைப்பிடிப்பு, மயக்கம் மற்றும் வலிப்பு போன்ற அறிகுறிகள் ஏற்படலாம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

பணிநேரங்களில் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும். தாகம் இல்லை என்றாலும், போதிய அளவு நீரை தொடர்ந்து பருக வேண்டும். அதிக அளவில் மோர், அரிசிக்கஞ்சி, இளநீர், எலுமிச்சைபழச்சாறு போன்றவற்றை பருகவேண்டும். உணவுப் பழக்க வழக்கங்களில் மாறுதல்களைச் செய்து கொள்ள வேண்டும். நீர்ச்சத்து காய்கறிகளைச் சாப்பிட வேண்டும். பழச்சாறுகளை அதிகமாக உட்கொள்ள வேண்டும். வெளியே செல்லும்போதும், திறந்த வெளியில் வேலை செய்யும் போதும் தலையில் பருத்தித் துணி,துண்டு,தொப்பி அணிந்து கொள்ள வேண்டும். பயணத்தின்போது குடிநீர் எடுத்துச் செல்ல வேண்டும். தேவையில்லாமல் வெயிலில் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

தமிழகத்திலுள்ள 2000 இற்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், நலவாழ்வு மையங்கள், சமூகநல மையங்கள், மகப்பேறு மருத்துவமனைகள், தொற்றுநோய் மருத்துவமனைகள் ஆகியவை வெப்பம் தொடர்பான நோய்கள் குறித்து சிகிச்சை வழங்குவதற்கு ஏதுவாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வெப்ப அலை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திட களப்பணியாளர்கள் மூலம் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டும், ஒளிப்படக் காட்சிகள் மூலமாக விளக்கப்பட்டும் வருகிறது."– என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்திரா காந்தியின் சொத்துகளை பாதுகாக்கவே பரம்பரை சொத்து வரியை ராஜீவ் ரத்து செய்தார்

## பிரதமர் மோடி தெரிவிப்பு

"கடந்த 1984 ஆம் ஆண்டு இந்திரா காந்தி இறந்த பின்னர் தனது பரம்பரைச் சொத்துகள் யாவும் அரசுக்குச் செல்லாமல் இருக்கவே, அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி பரம்பரை சொத்து வரியை ரத்து செய்தார். காங்கிரஸ் தற்போது பரம்பரை சொத்து வரியை திரும்பக் கொண்டுவர முயற்சிக்கிறது."

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மே 7 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள மத்தியப் பிரதேசம் மாநிலம் மொரீனாவில் நேற்று நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"உங்கள் காதுகளை நன்றாக திறந்து வைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சியின் பாவங்களை கேளுங்கள். நான் ஒரு சுவாரஸ்யமான உண்மையை உங்கள் முன்வைக்க விரும்பு கிறேன். சகோதரி இந்திரா காந்தி இறந்தபோது, நாட்டில் ஒரு சட்டம் இருந்தது. அதன்படி, செல்வத்தின் பாதி அரசாங்கத்துக்கு சென்றுவிடும். அப்போது இந்திரா காந்தி தனது சொத்துகளை அவரது மகன் ராஜீவ் காந்திக்கு எழுதி வைத்துவிட்டதாக ஒரு பேச்சு இருந்தது. அந்தச் சொத்துகள் யாவும் அரசுக்கு செல்லாமல் பாதுகாக்க, அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி பரம்பரை சொத்து வரியை ரத்து செய்தார்.

நான்கு தலைமுறைக்குப் பின்னர் தனது செல்வத்தின் பலன்களை அறுவடை செய்த பின்பு, காங்கிரஸ் கட்சி இப்போது பரம்பரை சொத்து வரியை மீண்டும் கொண்டுவரப் பார்க்கிறது. காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி அமைந்தவுடன், கஷ்டப்பட்டு உழைத்து நீங்கள் சம்பாதித்த சொத்துகள் உங்களிடமிருந்து பிடுங்கப்படும்.

ஆனால், அதுபோன்ற திட்டங்கள் வெற்றி பெற பா.ஜ.க. ஒருபோதும் அனுமதிக்காது. காங்கிரஸின் திட்டத்துக்கு தடையாக உங்களுக்கும் காங்கிரஸ்/க்கும் இடையில் தடுப்புச் சுவராக 56 இன்ச் மார்பு கொண்ட மோடி நிற்கிறேன். அதனால்தான் காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் அதிக அளவில் என்னை வசைபாடுகின்றனர்.

பாரத மாதாவின் கைகளில் உள்ள தடைகளை அகற்றுவதற்கு பதிலாக காங்கிரஸ் கட்சி அவரது கைகளை வெட்டி நாட்டை பிளவுபடுத்தப் பார்க்கிறது. தனது முஸ்லிம் வாக்கு வங்கியை பாதுக்காப்பதற்காக, காங்கிரஸ் கட்சி எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி. இடஒதுக்கீட்டை ரத்து செய்ய விரும்பியது. மேலும், மதத்தின் அடிப்படையிலான சமரச அரசியல் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற விரும்பியது.

நாட்டின் வளங்களை முதலில் பெறும் உரிமை முஸ்லிம்களுக்கே என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்தது. அதேநேரத்தில், ஏழைகளுக்கே முதல் உரிமை என்று நான் கூறிகிறேன். இன்று காங்கிரஸின் இளவரசர், மோடியைத் திட்டுவதன் மூலம் மகிழ்ச்சியடைகிறார். வாரிசுகள் அவதூறுகளைக் கேட்க நாங்கள் இருக்கிறோம். ஆனாலும், மக்களுக்கும் பாரத மாதாவுக்கும் தொடர்ந்து நாங்கள் சேவை செய்வோம். பல ஆண்டுகளாக ராணுவ வீரர்களுக்கான ஒரே பதவி ஒரே ஓய்வூதியம் திட்டத்தை அனுமதிக்கவில்லை. ஆனால் நாங்கள் அதைச் செய்தோம்.

நமது நாட்டின் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட போது வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்படக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. அரசியல் அமைப்பின் சிற்பியான பி.ஆர்.அம்பேத்கர் மத அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை எதிர்த்தார். ஆனால், காங்கிரஸ் கட்சி அதனை பின்வாசல் வழியாக அனுமதித்து அவரின் முதுகில் குத்தியது.

கர்நாடகாவில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி, சட்டவிரோதமாக பல முஸ்லிம்களை ஓ.பி.சி. பிரிவில் இணைத்துள்ளது. முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது சட்டவிரோதமானது மட்டுமின்றி அரசியலமைப்புக்கு எதிரானது. கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் மத அடிப்படையிலான இட ஒதுக்கீடு பற்றி காங்கிரஸின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது முஸ்லிம் லீக் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாக உள்ளது."– என்றார்.

# பிலிப்பைன்ஸில் அதிக வெப்பநிலை; 6 பேர் உயிரிழப்பு, விடுமுறை அறிவிப்பு






தென்கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸில் கடந்த 3 மாதங்களாக வறட்சியாக காலநிலை நிலவி வருகின்றது.

இம்மாத ஆரம்பத்தில் அங்கு வழமைக்கு மாறாக, அதிக வெப்பநிலை நிலவியதாக அந்த நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பிலிப்பைன்ஸின் பல்வேறு மாகாணங்களில் இயல்பைவிட அதிக அளவில் வெப்பநிலை நிலவி வருகின்றது.

குறிப்பாக மத்திய பிலிப்பைன்ஸ், சோசிச்கசர்கென் மாகாணம் ஆகிய பகுதிகளில் 110 டிகிரி வரை வெப்பநிலை பதிவாகியுள்ளதாக அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு இணைய வழியில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்த நிலையில், அதிக வெப்பநிலை காரணமாக பிலிப்பைன்ஸில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என பிலிப்பைன்ஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# பிரபல ரெப் பாடகருக்கு ஈரானில் மரண தண்டனை

ஈரான் நாட்டைச் சேர்ந்த பிரபல ரெப் இசைப் பாடகர் டுமேஜ் சலேஹிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் மஹ்சா அமினியின் மரணம் பேசுபொருளாக மாறிய நிலையில், ஈரான் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மஹ்சா அமினியின் மரணத்தால் தூண்டப்பட்ட ஈரான் தழுவிய ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவளித்தமைக்காகவே, பிரபல ரெப் இசைப் பாடகர் டுமேஜ் சலேஹிக்கு ஈரானிய நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2022 ஆம் ஆண்டு டுமேஜ் சலேஹி கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# ரஷ்யாவிற்கான ஆயுதக் கப்பல் சீனாவில் நங்கூரமிடப்பட்டுள்ளது

ரஷ்யாவிற்கு ஆயுதங்களை கொண்டு செல்லும் கப்பல் ஒன்று சீனாவில் நங்கூரமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான செய்மதி படங்களை ரொய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ளது.

இந்த கப்பல் வட கொரியாவில் இருந்து ஆயுதங்களுடன் ரஷ்யாவிற்கு செல்லும் என நம்பப்படுகிறது.

உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான போரில் சீனா ரஷ்யாவுக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் என்டணி பிளிங்கன் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.



இந்த விஜயத்தின் போது, மேற்படி கப்பல் தொடர்பில் அவர் கேள்வி எழுப்புவார் என நம்பப்படுகிறது.

### தலைமன்னார் சிறுமி கொலை:

# தப்பிச் சென்ற சந்தேகநபரை ஏன் கைது செய்யவில்லை?

### மன்னார் நீதிவான் கேள்வி



தலைமன்னார் – ஊர்மனைக் கிராமத்தில் 10 வயது சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று நீதிவான் கே.எல்.எம்.சாஜித் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் தப்பிச்சென்ற நிலையில், அவர் இதுவரை கைது செய்யப் படாதமையால், வவுனியா சிறைச்சாலை பொலிஸ் அத்தியட்சகரிடமும் தலைமன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமும் நீதிவான் கேள்வியெழுப்பியிருந்தார்.

எவ்வாறாயினும், அடுத்த தவணை விசாரணையின் போது சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனையடுத்து, வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அந்த வழக்கு விசாரணையில் மன்னார் சட்டத்தரணிகள் சிறுமியின் சார்பில் முன்னிலையாகியிருந்தனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாக தெரிவித்து அநுராதபுரம் விகாரையில் நிதி மோசடி

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி அநுராத புரத்தை அண்மித்த விகாரையொன்றில் நிதி சேகரிப்பில் ஈடுப்பட்டமை தொடர் பான தகவல்கள் வெளியாகியுள் ளன.

மேற்படி விகாரையின் விகாராதிபதி மற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவரின் தலையீட்டுடன் இந்தச் செயற்பாடு இடம்பெற்றுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இஸ்ரேலில் தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டு, 700 இற்கும் அதிகமானவர்களை விகா ரைக்கு அழைத்து, பல்வேறு மருத்துவ அறிக்கைகளை பெற்றுக்கொண்டு பணம் திரட்டப்பட்டுள்ளது.

இந்த மோசடியில் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

அனுமதியளிக்கப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் தவிர்ந்த ஏனைய தரப்பினருக்கு பணம் பெற்றுக்கொள்ள அதிகாரம் இல்லை என அமைச்சர் மனுஷ நாணயக்கார இதன்போது தெரிவித்தார்.



# இந்தியாவிலிருந்து பெரிய வெங்காயம் 2ஆயிரம் தொன் இறக்குமதிக்கு அனுமதி

லங்கா சதொச ஊடாக, இந்தியாவில் இருந்து 2,000 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள் ளது.

இறக்குமதிக்கான நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன என அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அத்த பத்து தெரிவித்துள்ளார்.

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந் தியா விதித்திருந்த தடை இலங் கைக்கு மாத்திரம் உத்தியோகபூர் வமாக நீக்கப்பட்டுள்ளதாக இலங் கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரா லயம் அண்மையில் அறிவித்திருந் தது.



# ஈரான் சக்தி வாய்ந்த நாடு என்ற செய்தியை உலகுக்கு இலங்கை, பாக். விஜயங்கள் மூலம் வழங்கியுள்ளோம்

## ஈரான் ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கை மற்றும் பாகிஸ்தான் விஜயத்தின் மூலம் பிராந்தியத்திற்கும் உலகிற்கும் ஈரான் ஒரு சக்தி வாய்ந்த நாடு என்ற செய்தியை வழங்கியுள்ளோம் என ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி தலைநகர் தெஹ்ரானில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயம் மேற்கொண்டு மீண்டும் நாட்டிற்கு திரும்பிய வேளையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈரான் தனது எதிரிகளை வலுவான மற்றும் கௌரவமான இடத்தில் இருந்து நடத்துவதாகவும் நட்பு நாடுகளுடன் ஈரான் தொடர்ந்தும் வலுவாக பயணிப்பதையே இந்த விஜயம் வெளிப்படுத்துவதாகவும் இப்ராஹிம் ரைசி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விஜயங்கள் சில காலத்திற்கு முன்பே திட்டமிடப்பட்டன என்றும் ஈரான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தின் முதற்கட்டமாக உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை திறந்து வைத்து, ஈரானின் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை இலங்கைக்கு வழங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதே இந்த விஜயத்தின் இரண்டாம் கட்டம் என ஈரான் ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளுடன் இருதரப்பு பிராந்திய , சர்வதேச உறவுகள், சந்தை, தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் ஒத்துழைப்பை தொடர்ந்தும் மேம்படுத்த ஈரான் ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளார்.

# இஸ்லாமிய கடும்போக்குவாதிகள் சிலரால் ஏப்ரல் 21 தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

## கோட்டாபய ராஜபக்ஷ அறிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இஸ்லாமிய கடும்போக்குவாதிகள் சிலரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாக்குதலை நடத்திய குழுக்கள் மற்றும் நபர்கள் தொடர்பில் அவ்வேளையில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் உயர்மட்ட பிரிவான சி.ஐ.டியினால் விசாரணை நடத்தப்பட்ட போதிலும், தாக்குதலுக்கு முன்னதாக சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய முடியாது போனதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நினைவுகூரும் ஆராதனையில் பேராயர் கர்தினால் ஆண்டகை ஆற்றிய உரையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்கு பதிலளிக்கும் வகையில், கோட்டாபய ராஜபக்ஷ நேற்று இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தார்.



தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து அவர்களின் அமைப்புகளை தடை செய்ய வேண்டும் என்பதால், ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது கடினம் என தாம் கர்தினாலிடம் கூறவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாம் பதவிக்கு வந்ததும் அப்போதைய குற்றவியல் விசாரணைத் திணைக்கள பணிப்பாளரை இடமாற்றம் செய்ததாகவும், விளக்கமறியலில் வைத்ததாகவும் கூறப்படும் குற்றச்சாட்டை மறுக்கின்றேன் என அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் ஆணைக்குழுவினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்த தரப்பினரின் பொறுப்புகளை புறக்கணிக்க அல்லது வெளிப்படையாக அவர்களை விடுவிப்பதற்காக கர்தினால் செயற்படுகின்றார் எனவும் தம் மீதான தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளை பொதுமக்கள் கவனமாக அவதானிக்க வேண்டும் என்றும் கோட்டாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.



# சிவனொளி பாத மலையின் உச்சியில் இருந்து குதித்தவர் 5நாள்களின் பின் உயிருடன் மீட்பு!



(செ.தி.பெருமாள்)

சிவனொளிபாத மலையிலிருந்து கீழே குதித்து காணாமல் போயிருந்த 33 வயது இளைஞர் 5 நாள்களின் பின்னர் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சிலர் மேற்படி இளைஞரை மீட்டு நல்லதண்ணி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்று ஹட்டன் வலயத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகம தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை சூரியவெவ பகுதியை சேர்ந்த அந்த இளைஞர் கடந்த 19 ஆம் திகதி சிவனொளிபாத மலைக்கு சென்றிருந்தபோது அங்குள்ள பாதுகாப்பு வேலியைக் கடந்து கீழே குதிக்கும் காட்சி அங்கு பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகியிருந்தது.

இதனையடுத்து பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அந்த இளைஞரை தேடும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். சம்பவம் இடம்பெற்று 5 நாள்களான நிலையில், மேற்படி இளைஞர் தோட்டத் தொழிலாளர்கள் சிலரால் மீட்கப்பட்டுள்ளார்.

நல்லதண்ணி பொலிஸ் வலயத்திற்குட்பட்ட மரே தோட்டத்தின் இராஜமலை பிரிவில் சிவனொளிபாத மலை வனாந்தரத்தின் எல்லைப் பகுதியிலுள்ள ஓடையொன்றின் அருகில் அந்த இளைஞர் கிடைத்தார் என்று நல்லதண்ணி பொலிஸாருக்கு தோட்டத் தொழிலாளர்கள் சிலர் அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், சிவனொளிபாத மலைப்பகுதியில் தனக்கு என்ன நடந்ததென நினைவில் இல்லை என வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிறகு அந்த இளைஞர் தெரிவித்துள்ளார்.

அந்த இளைஞன் மஸ்கெலியா வைத்தியசாலையில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது கூறியவை வருமாறு:–

நான் கடந்த 19 ஆம் திகதி சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த வேலையில் தரிசனம் முடித்து விட்டு திரும்புகையில் எனக்கு என்ன நடந்தது என ஞாபகம் இல்லை. சுயநினைவுக்கு சற்று திரும்பிய போது, ஒரு கால்வாய் அருகே இருந்தேன். பின்னர் மெதுவாக ஐந்து நாள்களாக கால்வாயில் இருந்து என்னால் முடிந்த வரை கீழே இறங்கினேன். சிவனொளிபாதமலை வனப் பகுதியில் உள்ள கற்குகைகளில் கழித்தேன். அந்த நாள்களில் தண்ணீர் மட்டும் குடித்துப் பசியைத் தீர்த்துக் கொண்டேன்." – என தெரிவித்துள்ளார் .

5 நாள்களையும் உணவின்றி கழித்துள்ள அந்த இளைஞர் தமக்கு பசிக்கும் போது நீரை அருந்தி பசியாற்றிக்கொண்டார் எனவும், இரவுப் பொழுதை வனத்திலுள்ள குகைகளில் கழித்த தமக்கு காலில் சிறு காயங்கள் மாத்திரமே ஏற்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் முதல் கட்ட சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இளைஞரை தேடும் பணிகள் 3 நாள்கள் முன்னெடுக்கப்பட்டும் அவர் கிடைக்காததால் தேடுதல் பணிகள் கைவிடப்பட்ட பின்னர் அந்த இளைஞர் உயிருடன் வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஐந்து நாள்களாக ஆகாரம் இல்லாமையால் மயக்கம் அடைந்த நிலையில் அவர் மீட்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. அவரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் மஸ்கெலியா வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# வவுனியா முன்னாள் உபநகரபிதா வீட்டில் திருடப்பட்ட அறுபது பவுண் நகைகளும் கூரைக்குள் இருந்து மீட்பு!

(வவுனியா நிருபர்)

வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகர பிதாவின் வீட்டில் திருடப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான 60 பவுண் நகைகள் அவரது வீட்டு கூரையில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள் ளன என வவுனியா பொலிஸார் தெரி வித்தனர்.

புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினரான வவுனியா நகரசபையின் முன்னாள் உபநகரபிதாவின் கோவில் குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் 60 பவுண் நகையும், கடவுச் சீட்டு ஒன்றும் திருடப்பட்டுள்ளன என வீட்டு உரிமை யாளரால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டையடுத்து வவு னியா தலைமைப் பொலிஸ் நிலை யத்தின் குற்றத்தடுப்பு பிரிவு பொலி ஸார் தீவிர விசாரணைகளை முன்னெ டுத்திருந்தனர். விசாரணைகளின் போது அவர்களது வீட்டில் இருந்த சீசிரீவி கமராக்களும் காணாமல் போயி ருந்தமை தெரியவந்தது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் திருட்டு நடந்த வீட்டின் கூரைப்பகுதியின் கீழ் சூட்சுமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 60 பவுண் நகைகளையும் மீட்டனர். அங்கிருந்து கடவுச் சீட்டும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் வீட்டில் நின்றவர்கள் மற்றும் வெளிநாட்டில் இருந்து வருகை தந்து தங்கியிருந்த அவர்களது உறவினர் ஆகியோர் பொலிஸாரால் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட நகைகள் பொலிஸ் நிலையத்தில் உள்ளன. அவற்றை நீதிமன்றில் ஒப் படைக்கப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர், இச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை என பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.



# கடலுணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் உணவுப் பாதுகாப்புப் பரிசோதனை நடவடிக்கை

(த.சுபேசன்)

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் கடலுணவுக் கொள்வனவு மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் அண்மைய நாள்களில் திடீர் உணவுப் பாதுகாப்புப் பரிசோதனைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான பொது சுகாதார பரி சோதகர் குழுவினரால் பள்ளிக்குடாப் பகுதியில் இயங்கிவரும் ஆறு தொழிற் சாலைகள் உணவுப்பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் சுகாதாரக் கண்காணிப்புப் பரிசோனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் அதிகளவான கடலுணவு கொள்வனவு மற்றும் பதப்படுதல் மேற்கொள்ளும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்ற நிலையில் அவை சரியான வகையில் உணவுப் பாதுகாப்பு முறைகள், தொழி லாளர் பாதுகாப்பு, சுற்றாடல் சுகாதாரம் என்பவற்றைக் கடப்பிடிக்கின்றனவா எனப் பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டன. இதன்போது பயன்படுத்தப்பட்ட கழிவு நீர் உரிய வகையில் பரிகரிக்கப் பட்டே கடலுக்குள் விடப்பட வேண்டு மெனவும், உணவு பதனிடும் போது தொற்றுக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் முறைகள் குறித்தும் மற்றும் தொழிலா ளர் பாது காப்புக் குறித்தும் சுகாதாரப் பரிசோத கர்களால் அறிவுறுத்தப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.




# 3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கும் ஜப்பான்

இலங்கையின் கடற்றொழிலை வலுப்படுத்தவும் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உணவு மற்றும் விவசாய அமைப்பு மூலம் 3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஜப்பான் வழங்கியுள்ளது.

கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து உள்நாட்டு கடற்றொழில் துறையை வலுப்படுத்தவும் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஜப்பான் அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மூலம் 3 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தை வழங்கியுள்ளது.

இந்த 3 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் உணவு மற்றும் போஷாக்குப் பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, அனுராதபுரம் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் மீன் இனப்பெருக்க நிலையங்களை ஸ்தாபித்து மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களை மேம்படுத்தி இனவிருத்தி மற்றும் வளர்ப்புத் திறனை அதிகரிக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்ட, நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பை அதிகரிக்கவும் உத்தே சிக்கப்பட்டுள்ளது.

தீவு நாடுகளான ஜப்பானும் இலங்கையும் தமது பொருளாதாரங்கள் மற்றும் கலாசாரங்களில் மீன் வளத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுகின்றன என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு மீன் பிடித்துறை, வரலாற்று ரீதியாக அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கி வருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது கூறியுள்ளார்.











# வவுனியாவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது கடவுச்சீட்டு காரியாலயத்துக்கு முன்பாக

(கே.வசந்தன்)

வவுனியா பிராந்திய கடவுச்சீட்டு காரி யாலயம் முன்பாக நேற்றுக் காலை பொலிஸார் முன்னெடுத்த திடீர் சோதனை நடவடிக்கையின் போது கஞ்சாவைக் கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைப் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 1000 மில்லிக்கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. இதனை அவர் விற்பனைக்காக வைத்திருந்தாரா அல்லது பாவனைக்காக வைத்திருந்தாரா என்ற கோணத்தில் விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். மேலதிக விசார ணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஊடகவியலாளர் ரூபனுக்கு உணர்வுபூர்வ நினைவேந்தல்

ஊடகவியலாளர் செல்வரத்தினம் ரூபனின் 14 ஆவது ஆண்டு நினைவேந்தல் பொன்னாலையில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பொன்னாலை வெண்கரம் இலவச படிப்பகத்தில் நேற்று மாலை ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான ந. பொன்ராசா தலைமையில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட டது.

இதன்பொழுது ஒரு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டு ஊடகவியலாளர் செல்வரத்தினம் ரூபனின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஈகை சுடரும் ஏற்றி வைக்கப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மிக நெருக்கடியான காலங்களில் துணிச்சலாக ஊடகப் பணியை ஆற்றி வந்தவர்களில் மறைந்த ஊடகவியலாளர் செல்வரத்தினம் ரூபனும் முக்கியமானவராக இருந்திருந்தார்.

குறிப்பாக இறுதிக்கட்ட யுத்தத்தின் பொழுது யாழ் குடாநாட்டிற்கான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் இராணுவ கட்டுபாட்டிற்குள் ‘தினக்குரல்’ பத்திரிகையின் உதவி ஆசிரியராக கடமையாற்றி கள நிலைமைகளை ஊடகங்களின் வாயிலாக அவர் வெளிக்கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் ஊடகவியலாளர் பொன்ராச, வெண்கரம் படிப்பகத்தின் ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர் ரூபனின் உறவினர்கள், பொன்னாலை பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# மன்னாரில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் முகவர் எனக் காட்டி சுளையாகச் சுருட்டும் மோசடி



மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பகுதியில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணியை பெற்று தருவதாகல் கூறி மாந்தை மேற்கு பகுதியில் பல நபர் களிடம் பல லட்சம் ரூபா லஞ்சமாக வழங்கியுள்ளனர் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நபர் தாம் பள்ளமடுவில் உள்ள மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தில் வேலை செய்கிறார் எனவும் கூறியுள் ளார்.

சுமார் 50 லட்சம் ரூபாவுக்கு மேல் அவரிடம் தாங்கள் பணம் வழங்கி உள் ளனர் எனக் கூறும் மக்கள் ஆனால் இதுவரை தமக்குக் காணி கிடைக்க வில்லை என்பதால் விரக்தியடைந்து ஒவ்வொருவராகப் பொலிஸ் நிலை யத்தில் ஒவ்வொருவராக முறைப்பாடு செய்து வருகின்றனர்.

இவர் தாம் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் இணைப்பாளர் எனவும் கூறி வருகிறார் எனவும் பாதிக் கப்பட்டவர்கள் தெரிவித்தனர்

எனவே காணியுடன் சம்பந்தமில்லாத ஓர் அரச ஊழியர் இவ்வாறு காணி முகவர் போல நடித்து லஞ்சம் பெற்றமை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர் தாம் பெற்ற லஞ்சப் பணத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளிடம் வழங்கியுள்ளார் எனப் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் கூறியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஏக்கருக்கு 30 ஆயிரம் தொடக்கம் 59 ஆயிரம் ரூபா வரை லஞ்சம் பெற்றுக் கொண்டு பலருக்கு மாந்தை மேற்கு பகுதியில் காணி வழங்கி உள்ளதாகவும் சில தரப்புகளில் குற்றச்சாட்டுக் கூறப் படுகின்றது. ஒருவர் தான் 10 லட்சம் ரூபாவுக்கு மேல் லஞ்சம் வழங்கி காணி பெற்றுக் கொண்டார் எனவும் தெரிவித் திருக்கின்றாராம்.

இந்த நபர் மட்டுமன்றி இவ்விட யத்தைக் கையாள வேறு முகவர்களும் உள்ளனர் எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கூட்டு லஞ்சம் பெறும் கும் பலை உடனடியாகக் கைது செய்து சட்டத்துக்கு முன் நிறுத்துவதுடன் இதற்கு பின்னால் உள்ள அதிகாரிகளையும் வெளிப்படுத்த வேண்டும் என பாதிக்கப் பட்ட தரப்பினர் கோரிக்கை விடுத் துள்ளனர்.





# இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா கொழும்பில் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல்

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கடந்த சில தினங்களில் சில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜயகுணவர்தன ஆகியோரை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தித்திருந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு வகையிலான இருதரப்பு கூட்டு நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் அரசியல் நிலைமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக இந்தியத் தூதரகத்தின் எக்ஸ் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன் மற்றும் அமீர் அலி ஆகியோரும் சந்தோஷ் ஜாவைச் சந்தித்துள்ளனர்.



அரசியல் உறவுகள் மற்றும் இரு தரப்பு நலன்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களையும் சந்தித்துள்ளார்.

லசந்த அழகியவண்ணா, துமிந்த திசாநாயக்க,பைசர் முஸ்தபா மற்றும் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோரையும் அவர் சந்தித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.04.2024




இன்றைய நாள் சிறப்பாக இருக்கும் உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும். அதனால் நன்மை ஏற்படும்.

இன்று பரபரப்பாக காணப்படுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பூர்வீகச் சொத்து வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சமநோக்கு நாளாக அமையும். இன்று புதிய நண்பர்கள் மற்றும் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

உங்கள்திறமைக்குமேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் பணிகளை தன்னம்பிக்கையுடன் மேற்கொள்வீர்கள் மற்றும் கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை அதிக வாய்ப்புகள் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும்.

இன்று ஆரோக்கியமாக இருப்பதற்கான வலிமை உங்களிடம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். இன்று எதிர்ப்படும் எந்தத் தடைகளையும் நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள். இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக நடக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக குறித்த நேரத்துக்கும் உங்கள் பணிகளை செய்து முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் இருவரும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான திறமை உங்களிடம் காணப்படும். உங்களிடம் காணப்படும் பணத்தை ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு செலவு செய்து திருப்தியடைவீர்கள்.




நீங்கள் இன்று கடைசி நிமிடத்தில் வாய்ப்பை இழப்பீர்கள். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமுடன் பணியாற்ற வேண்டியது அவசியம். இன்று ஓய்வின்றி பணிகள் செய்ய நேரும்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்ச்சிவயப்பட்ட மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

இன்று அதிக பணம் செலவு செய்வீர்கள். இன்று சுதந்திரமாக நிதியைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி அல்லது இருமல் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று நல்ல பலன்களைக் காண புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். பிரியமானவர்களுடன் மோதல்கள் ஏற்படாமல் இருக்க கவனமாக தொடர்பு கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் பணிகளில் வெற்றி கிடைப்பது அரிது. கடின உழைப்பின் மூலம் மட்டுமே இன்று நன்மை கிடைக்கும். உங்கள சமயோசித புத்தியை பயன்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை கொள்வது நல்லது.உங்கள் சலிப்பு மனப்பான்மையை வெளிப்படுத்தாதீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.




இன்று உங்களுக்கு அதிர்ஷ்டகரமான நாளாக அமையலாம். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று உங்கள் பணியில் வெற்றி காண்பீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு பதவி உயர்வு தந்து பாராட்டுவார்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிபத்துடுவீர்கள்.இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று கடின உழைப்பின் காரணமாக வெற்றி கிடைக்கும். இன்று ஊக்கத்தொகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. அதனால் மகிழ்ச்சியடைவீர்கள்.

திடமான மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் உணர்ச்சிவசப்படும் போக்கின் காரணமாக நீங்கள் சில சிறந்த வாய்ப்புகளை இழக்க நேரலாம். எனவே இன்று நீங்கள் சாதுர்யமாக செயல்பட வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடனான உறவுமுறை சிறப்பாக இருக்காது. மனப்போக்கை மாற்றினால் நல்ல உறவை வளர்க்க முடியும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்ள இதனை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி குறைவாக இருக்கும். ஆரோக்கியத்திற்கான கூடுதல் செலவுகள் காணப்படும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கால்கள் மற்றும் மூட்டுக்களில் திடீரென்று வலிகள் ஏற்படலாம்.




எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் சிறப்பாக திட்டமிட வேண்டும். ஒரு முடிவை எடுக்கும் முன் பாதகம் ஏற்படாமல் இருக்க ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும், பெரியவர்களின் ஆலோசனையை கேட்பது நல்லது.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இருவரும் மகிழ்வுடன் இருக்க இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.இன்று நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. தேவையற்ற கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.04.2024




இன்றைய நாள் சற்றே அனுகூலமாக இருக்கும். அதிர்ஷ்டத்தை விட சுய முயற்சியை சார்ந்திருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். ஓய்வுக்கு நேரம் கிடைப்பது அரிதாக இருக்கும். நல்ல விளைவுகளைக் காண பணிகளை திட்டமிட வேண்டும்.

இன்று உங்களிடம் பதட்டமான உணர்வு காணப்படும். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். எனவே அமைதியான மன நிலை மேற்கொள்வது சிறந்தது.

குறைந்த அளவு பணமே காணப்படும். கூடுதல் செலவினங்கள் கவலையை அளிக்கும்.




இன்று மிகவும் அனுகூலமான நாள். உங்கள் மனம் அமைதியாக இருக்கும். விருப்பங்கள் நிறைவேறும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

பணியிடத்தில் சுமூகமான விளைவுகள் இருக்கும். உங்கள் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.உங்கள் உறவு திருப்திகரமாக இருக்கும். வெளியி டங்களுக்கு செல்வதன் மூலம் நல்லுறவை பராமரிக்க முடியும்.

தொழில் செய்பவர்கள் நல்ல லாபம் காண்பார்கள். நிறுவனத்திற்கு புதிய தொடர்பாளர்கள் கிடைத்து அவர்கள் மூலம் லாபம் கிடைக்கும்.இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். நீங்கள் இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

பணியில் உங்கள் முயற்சிக்கு பாராட்டைப் பெறுவீர்கள். உங்களுக்குள் இருக்கும் திறமை காரணமாக கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். நகைச்சுவை அணுகுமுறை உங்கள் உறவை வலுப்படுத்தும். இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை பெறுவீர்கள். புதிய முத லீடுகள் செய்வதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள் இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று திட்டமிட வேண்டியது அவசியம். மனதில் சில குழப்பங்கள் ஏற்படலாம். குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். எந்த காரியத்தையும் செய்வதற்கு முன் யோசிக்க வேண்டும்.

பணியிடத்தில் அதிர்ஷ்டம் கை கொடுக்காது. நீங்கள் கடின உழைப்பை சார்ந்திருக்க வேண்டும். உங்கள் திறமையும் கவனிக்கப்படாமல் இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் கெடும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது. அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழப்பீர்கள். நிதியைப் பொருத்தவரை முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.





